284

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

284
9 - FEB 1945

Editor & Publisher: ... A. Lourduswami, B.A., L.T.
R.C. ... Training School, Trichinopoly.

JL
N45 357
189999

... ஜனவரி 1945 மலர் 7

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ருபாய் 1. தனிப்பிரதி அணு 2.

கொத்து 35] 15 ஜனவரி 1945 [மலர் 7

பத்திராதிபர் குறிப்புகள்

We wish all our Subscribers and Well wishers A Most Happy and Prosperous New Year.

நம் அன்பார்ந்த பழைய புது மாணவர்கட்கும், நம் சந்தாதாரர்களுக்கும், ஏனைய நம் "பூங்கொத்து" நேயர்களுக்கும் எமது புது வருட வாழ்த்தும், நன்றியும் உரித்தாகுக.

பல நிர்ப்பந்தங்களுக்கிடையில் நம் "பூங்கொத்து" பிரசுரமாகி வருவதை நம் நேயர்கள் நன்கறிவர். பக்கங்கள் சர்க்காரின் நிபந்தனைப்படி குறைக்கவேண்டிய சங்கடம் வந்தபோதிலும், "பூங்கொத்தின்" மணத்திற்கு யாதொரு பங்கம் வராதபடி எம்மாலியன்றமட்டும் உழைத்துவருகிறோம். எனவே நம் அன்பார்ந்த வாசகர்கள் வழக்கம் போல் நம் "பூங்கொத்தை"ப் போற்றிவருவதுடன் இன்னும் பல புது சந்தாதாரர்களைச் சேர்த்தும், விஷயதானம் புரிந்தும் "பூங்கொத்தை" ஆதரித்து வருவார்களாக.

இந்தத் தாய்ப் பாடசாலையின் பொருட்டும், "பூங்கொத்தின்" பொருட்டும் உழைத்துவருகின்ற, நம் மாணவர்கட்கும், ஏனைய அபிமானிகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மனமுவந்த நன்றியை மற்றுமோர்முறை தெரிவித்துக்கொண்டு, எல்லாம் வல்ல இறைவனது திருவருளை வேண்டுகின்றனம்.

* * *

சென்னை கல்வி இலாகா தலைவராக (Director of Public Instruction) இருந்த Sir R. M. Statham அவர்கள் சென்ற மாதம் 27-ம் தேதி, புதன் காலையில் காலமான செய்தி நம் மாகாணத்தைத் திடுக்கிடச் செய்தது.

சென்னை மாகாணத்தின் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு காலஞ்சென்ற ஸ்டேத்தம் துரையவர்கள் ஊக்கத்துடன் உழைத்து வெற்றிபெற்றதைப்போல் முந்திய வேறு எந்தத் தலைவரும் இருந்ததில்லை என்பது பிரசித்தம். முக்கியமாய்ப் பெண் கல்வியின் முன்னேற்றத்திற்காக அவர் செய்துள்ள ஏற்பாடுகள் தக்கபலன் அளித்து வருவது கண்கூடு. சுருங்கக்கூறின் ஆரம்பக் கல்வி, இம் மாகாணத்தில், மற்றைய மாகாணங்களைவிட வெகுவாக முன்னேற்றம் அடைந்து வருவதற்கும் ஆரம்பப் பாடசாலைகளில் தாண்டவமாடிக் கொண்டிருந்த (Stagnation and Wastage) தேக்கம், நஷ்டம் முதலிய பல ஊழல்கள் அறவே நீக்கப்பட்டு, பாடசாலைகள் திறமையாய் வேலைசெய்துவரும்படி ஏற்பட்டிருப்பதற்கும், அன்னவர் அயராது உழைத்த உழைப்பை மெச்சாதவர்கள் யார்?

ஆரம்பக் கல்வித்துறையில் முற்போக்கான முறைகளைக் கண்டவரும், நம் மாகாண ஆசிரியர்களுக்கே ஒரு அரிய நண்பருமாக விளங்கி, அனைவரது மனதையும் கவர்ந்த, காலஞ்சென்ற Sir R. M. Statham அவர்களது அகால மரணத்திற்காக எமது முழு அனுதாபத்தையும் இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

189999

சென்னை கல்வி இலாகா

Proceedings of the Director of Public Instruction Madras. R. C. No. 5753/43 ; dated 26—10—44.

ஷை அறிக்கையின்படி, புதுத்திட்டத்தின்படி (Revised Scheme) பயிற்சிபெற்றுள்ள எல்லா ஆசிரியர்களும் அவர்களுடைய பயிற்சிக்குப்பிறகு, அவரவர் ஸெர்விஸைப்பற்றி அவரவர் ஸர்ட்டிபிக்கேட்டில் எந்த "ரிமார்க்கு" குறிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் T. T. C. holders என்ற முற்றிலும் பயின்ற ஆசிரியர்களாகவே கருதப்படுகிறார்கள்.

குறிப்பு: P. T. C. எடுபட்டுபோன விபரம் நம் "பூங்கொத்தில்" ஏற்கனவே பிரசுரமாயிருப்பதைப் பார்க்கவும்.

* * *

R. C. No. 412-c/44, dated 8—11—44 of the Office of the Secretary to the Commissioner for Govt. Examinations, Madras.

1. இந்த உத்திரவின்படி, எலிமெண்டரி லோவர்கிரேடு ஆசிரியர்கள் ஹையர்கிரேடுக்கு மாற்றிக்கொள்ளுவதற்காக T. S. L. C. பரீட்சை எழுதுவது வழக்கமாக இருந்தது. ஆனால் அத்தகையோர் இனி அவ்வாறு பரீட்சை எழுத உத்தரவு இல்லை. புதுத்திட்டத்தின்படி கூட அவர்கள் ஹையர்கிரேடு T. S. L. C. பரீட்சை எழுத அனுமதி கிடையாது.

2. ஆனால் 1944-ம் வருஷத்திலோ அதற்கு முந்திய வருஷங்களிலோ பழையதிட்டத்தின்படி (Old Scheme) பரீட்சை எழுதித் தவறிப்போன, எலிமெண்டரி ஹையர்கிரேடு ஆசிரியர்களும், ஸெக்கண்டரிகிரேடு ஆசிரியர்களும், எல்லாப்பாடங்களிலும் புதுத்திட்டத்தின்படி (Revised Scheme) பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

* * *

Amendments to Madras Educational Rules (G. O. No. 1910. Education, 28th Dec. 1944).

ஷை திருத்தவிதிகளின்படி, யுத்த காலத்தையனுசரித்து யுத்த கால ஏற்பாடாக, ஸெக்கண்டரிகிரேடில் சேர்ந்து போதனாமுறை பயிலும் ஆண், பெண் மாணவர்களுக்கு மாத "ஸ்டைபெண்டு" (Stipend) ரூபாய் 12 வீதம் வழங்கப்படும் என்றும், எலிமெண்டரி

கிரேடு மாணவர்களுக்கு ரூபாய் 8 வீதம் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

[Fort St. George Gazette, Dec. 19, 1944—Pages 537—538] VIII வகுப்பு முடிவுப் பரீட்சை, **1945.** இப்பரீட்சை 1945-ம் வருஷம் ஏப்ரல் மீ இரண்டாவது வாரத்தில் நடைபெறும்.

பரீட்சைப் பாடங்களாவன: (1) பாஷை (தமிழ்) (2) கணிதம் (3) சரித்திரம், பூகோளம், அரசியல் (4) ஆங்கிலம் (English as an optional subject).

ஆங்கிலப் English (இஷ்டப்பாடம்) பாடத்தையும் எடுத்து பரீட்சை எழுதித் தேறினவர்கள் ஸெக்கண்டரி பாடசாலையில் (Secondary School) IV பாரத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார் கள். இந்த நோக்கத்தை முன்னிட்டுத்தான் ஷை இங்கிலீஷ்பாடம் இஷ்டப்பாடமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே, 1942, 1943, 1944-ம் வருஷங்களில் தவறிப்போன மாணவர்கள், 1945-ல் இங்கிலீஷையும் இஷ்டப்பாடமாக எடுத்து மற்றப் பாடங்களோடு சேர்த்து பரீட்சை எழுதலாம்.

1942, 1943, 1944-ம் வருஷங்களில் VIII வகுப்பு முடிவுப் பரீட்சை எழுதி "பாஸ்" செய்தவர்கள்கூட 1945-ம் வருஷத்தில் "இங்கிலீஷ்" (English-optional) பாடத்திற்கு மாத்திரம் பரீட்சை எழுதலாம். தேறினால் IV பாரத்தில் சேர்ந்து ஹைஸ்கூலில் படிக்கலாம். ஆனால் இவர்கள் அங்கீகாரமான ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் VIII வகுப்பில் சேர்ந்து ஒரு வருஷம் இங்கிலீஷ் பாடம் படித்திருக்கவேண்டும். (75 % of the required attendance.)

* * *

இங்கிலீஷ்பாட புத்தகத்தில் பரீட்சைப் பாடங்கள் குறைவு:— ஷை இங்கிலீஸ் இஷ்டப்பாடமாகப் படிப்பதற்கு ஏற்பட்டிருக்கிற 1945-ம் ஷூ டெக்ஸ்டு புத்தகத்தில் (Village Readers Reader V Published by the Oxford University Press) கடைசி 5 பாடங்கள் (65-ம் பக்கத்திலிருந்து 86-ம் பக்கம்வரை) பரீட்சைக்குப் படிக்கவேண்டியதில்லை. ஆகவே ஷை புத்தகத்தில் முதல் 16 பாடங்களில்தான் (1 முதல் 64 பக்கங்களுக்குள்) பரீட்சைக் கேள்விகள் போடப்படும் என்பதை அறியவும். மனப்பாடத்திற்காக குறித்துள்ள செய்யுள்கள் (1) The Monsoonwind (2) Harvest இவ்விரண்டும் மாறவில்லை; இவற்றைப் படிக்கவேண்டும். ஷை இங்கிலீஷில், 100-க்கு 35-க்குக் குறையாமல் பரீட்சையில் மார்க்கு வாங்குபவர்கள்தான் "பாஸ்" (vide page 7 of Fort St. George Gazette dated 2-1-1945).

போதனுவிஷயப் பூங்கொத்தின் 36-ம் ஆண்டு

வாழ்த்துப்பா

(மலரன்பன்)

பொங்கிரு முன்னீர்ப் பூநில வரைப்பிற்
பங்கமில் சீர்த்திப் பண்பு மேம்படீஇ
தீதறு கேள்வித் திறம்பல பொதிந்த
போதனு விஷயப் பூங்கொத் தென்னும்
கார்பொழி பருவக் கடல்நீ ரென்னச்
சீர்பெறு புதுமணச் செம்பொரு ளீயும்
சுருக்கமில் ஞானத் துறைபல நிறைந்த
திருக் குடும்பத்தின் சேமம் பெற்ற
போதனு சாலைப் பொன்னனை பயந்த
மாதவம் செய்த மருமலர்ச் செல்வ!
வான்பொய்த் திடினும் வளிநிலை மாறினும்
தான்பொய்ப் பில்லாத் தண்ணளி யாள!
தன்றகை நினையாத் தகுதி யோர்க்கும்
சென்று பயன்றரும் செம்மைய ரேய்ப்ப
அரும்பெரு நின்பண் பறியா ரிடத்தும்
விரும்பியாண் டடைந்து விரைமண மளிப்போய்,
ஏழைந் தாண்டுகள் இசைபட வொழிகி
வாழைநன் மரமென வளனெலாந் தந்து
பின்னுநற் பயன்றரு பெற்றியை யோர்ந்து
நன்னெறி வழாது நடைபெறு தூயோய்
வற்கடஞ் சென்று வறுமைசேர் போதும்
பொற்குடந் தாங்கிப் பொன்பொழி வோரென
கடிதப் பஞ்சம் கலக்குமிந் நாளினும்
மடிதந் திடாது மன்பொருள் தருவோய்!
நாலுறழ் ஒன்பா னலம்பெறு மாண்டினும்
மேலுமதைத் தொடர் மிகப்பல வாண்டினும்
எம்மனோர்க் கெல்லா மிதம்பல செய்து
வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாண்டு
ஏழ்கடல் வரைப்பி னிருநில மகிழ
வாழ்க பல்லாண்டு மணமொடு சிறந்தே.

பாடக் குறிப்பு

பாடம்: **அரசியல் நூல்.** **5வது வகுப்பு.** நேரம்: 40 நிமிஷம்.

நோக்கம்: ரஸ்தாவில் மாணவர்கள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்கைக் கற்பித்தல்.

உபகரணங்கள்: ரஸ்தாவின் சின்னங்கள் ரெயில்கேட், சிறுவர் நடமாட்டம், திடீர் விளைவு, முதலியன.

MADRAS 8 FEB 1945
189999,
N45 357

பீடிகை : ரெயில்வே டிக்கெட், சினிமா டிக்கெட், வாங்குமிடங்களில் ஏற்படும் சிரமம் சச்சரவு சில சமயங்களில் கஷ்டம் இவற்றை மாணவரின் அனுபவவாயிலாக சம்பாஷித்து வரிசைக் கிரமப்படி செல்வது அவசியம் மென்பதை வருவித்தல். ரஸ்தாவில் ஏற்படும் எதிர்பாராத சம்பவங்களையும் சில விதிகளின்படி நடந்தால் தடுக்கலா மென்று வருவித்து நோக்கத்தை வெளியிடுக.

விஷயம் :

(1) ரஸ்தாவில் இடது பக்கம் மேடையில் நடத்தல்.

(2) மேடையில்லாத ரஸ்தாக்களில் வலதுபக்கமாய்ச் செல்லுதல்.

(3) ரஸ்தாவில் நிற்பதையும் பேசுவதையும், விளையாடுவதையும் தடுத்தல்.

(4) ரஸ்தாக்கள், பாதைகள் முதலியவற்றைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல். பழத்தோல்கள், கண்ணாடித்துண்டுகள், ஆணிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தல்.

(5) ரஸ்தாக்களைக் கடக்கும்போது ஜாக்கிரதையாயிருத்தல்.

(6) வாகனங்களின் உபயோகம். எப்பொழுதும் இடது பக்கம் ஓட்டுதல், முந்தவேண்டுமானால் முன் செல்லும் வாகனத்தின் வலது பக்கம் எதிரேவரும் வாகனத்திற்கு இடையூறில்லாமல் செல்லுதல், நிற்றில் இறங்குதல் முதலியவற்றிற்கான விதிகள்.

முறை :

(1) போலீசார் பாதசாரிகளையும், மோட்டார், சைக்கில், குதிரை, மாடு முதலிய வாகனங்களையும் ஒழுங்கு செய்யும் விதத்தை ஞாபகப்படுத்தி விளக்கவும்.

(2) திருச்சி போன்ற நகரங்களில் ரஸ்தாச்சின்னங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருப்பதை எடுத்துக்கூறி அவற்றின் உபயோகங்களை விளக்கவும்.

(3) மாணவர்களை பாடசாலை வெராண்டாவில் அல்லது விளையாடுமிடத்தில் நிறுத்தி, விஷயத்தில் கூறிய ரஸ்தாவிதிகளை அனுபவசித்தமாக நடித்துக்காட்டும்படி உதவி செய்தல்.

(4) வகுப்பறையைவிட்டு வெளிச்செல்லும்போதும் வகுப்பிற்குள் நுழையும்போதும் விஷயத்தில் கூறிய விதிகளை அநுசரித்து ஒழுகும்படி வற்புறுத்துதல்.

(5) மேற்படி விதிகளை அனுசரிப்பதால் உண்டாகும் நன்மைகளையும் அனுசரிக்காததால் ஏற்படும் தீமைகளையும் புலப்படுத்துவதற்காக இந்தப் பாடத்தை டெமான்ஸ்ட்ரேஷன் (Demonstration) செய்து போதிப்பதே தகுதியாகும்.

(6) முக்கியமான விதிகளைக் க. ப. வில் எழுதவும்.

கொல்லிமலையின் இயற்கைச் சாதனங்கள்

(P. Muthvel, H. M., Pachaperumalpatty)

189999

இம் மலையானது திருச்சி ஜில்லாவின் வட மேற்கில் எல்லையாக சேலம் ஜில்லாவில் அமைந்துள்ளது. சுமார் 30, 35 மைல்கள் நீளமும் ஒரு மைல் உயரமுமுள்ளது. மலையின்மேல் சில இடங்கள் சரிவாயும், பள்ளமாயும் சில இடங்கள் சமதரையாகவுமிருப்பதால் விவசாயம் செய்ய ஏற்றதாகவுமிருக்கிறது. இங்கு கோடையிலும், மாரியிலும் குளிர் அதிகம், மழையும் பெய்கிறது. (வட அமெரிக்கா ஐக்கிய நாடுகளின்) குளிர்கால மழைப்பிரதேசத்தில் கலிபோர்னியா பழத் தோட்டங்களைப்போல், கோல்லிமலையிலும் பழமரங்களுக்கேற்ற சீதோஷ்ணநிலை கலிபோர்னியாவைப்போலவே என்று சொல்லலாம். ஆனால் சிற்சில விஷயங்களில் கலிபோர்னியாவுக்கும், கொல்லிமலைக்கும் சமப்படுத்த முடியாது. கொல்லிமலையில், ஆரஞ்சு, எலுமிச்சை, அன்னாசி, நார்த்தை, த்ராட்சை, வெம்பளிமாஸ், வாழை, பலா, மாதுளை, கொய்யா, மா முதலிய பழ வகைகளும், காப்பிக்கொட்டை, கோதுமை, நெல், கடுகு, மிளகு, இஞ்சி, ஏலக்காய், ஜாதிக்காய் இன்னும் பலவிதமானவைகளும் விளைகிறது. மழை தவறாமல் பெய்வதால் பஞ்சம் ஏற்படுவதில்லை.

காடுகளில் மூங்கில், சந்தனமரம், தேக்குமரம், வேலைப்பாட்டிற்கான மரங்களும், பலவித செடி, கொடி, முட்புதர்களுமுண்டு. காட்டில் துஷ்ட மிருகங்களும், அதாவது; புலி, கரடி, செறுத்தை, காட்டுப்பன்றி, மான், முயல், காட்டுப்பூனை, நாய் இவைகள் வசிக்கின்றன. இன்னும் மருந்து மூலிகைகளும், சஞ்சிவி, தேன் இவைகளும் இருக்கிறது. மலையின்மேல் வசிக்கும் விஷப்பாம்புகள் மனிதர்களைக் கடித்தாலும் விஷம் இல்லையென்றும் கீழ்நிலப்பகுதிக்கு வந்தால் விஷம் உண்டென்றும் சிலர் சொல்லுகிறார்கள். மலையின்மேல் அநேக சந்நியாசிகள் இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

மலையின்மேல் சமதரையான இடங்களில் வீடுகட்டிக்கொண்டு மலைவாசிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கும், பச்சை மலையில் இருப்பவர்களைப்போலவே கவுண்டன் என்று பெயர். இவர்களுக்குள் ஜாதிக்கட்டுப்பாடு உண்டு. நல்லொழுக்கமுடையவர்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் பெரியதனக்காரர் உண்டு. சுகாதாரத்துக்கேற்றபடி வீடுகள் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். கிறிஸ்துவ குருமார்கள் மலைக்கு வந்து தங்கி அங்காங்கு ஆண்பாடசாலை, பெண்பாடசாலை ஏற்படுத்தி, மலைவாசிகள் நாகரீக முறையைக் கையாடிவருகிறார்கள். சிலர் இந்துக்களாகவும், சிலர் கிறிஸ்துவர்களாகவும் இருக்கிறார்கள்.

(தொடரும்.)

Reg. No. M. 1534

சங்கீதம்

[B. Thomas Victor, Music Teacher.]

ஆபத்தில் உதவாத நேசன்

29 ஹிந்துஸ்தானி] [ஆதி-தாளம்.

	2	2
, ஸ ஸ ரி க ா க ரி	க ப ம த	ப ம ப ா
. ஓர் நா ளி ரு .	நண். பர்கள்	கூ . டி
, க க ம க ரி ஸ நி	ஸ ரி ஸ க	ரி நி ஸா
. வியா பா ரம் . செய்ய	அய லூர்	போ. க
, ரி ரி ரீ ரி க ம ப	க ம ரி க	ஸ ஸ நீ
. குறுக்கில் ஓர் பெரும்	கா. னகம்	தோன்ற
, ப ஸ நி ஸ ரி க ம	ரீ ரி க ரி	ஸ நி ஸா
. வீரமாய் நே. யர்கள்	தம் வழி	சென்றார்

2. காட்டின் மத்தியில் ஓர் பெரும் கரடி
வேகமாய் நம் நேயரை நோக்கி
ஓடி வருவதை கண்டவர் அஞ்சி
மனம் கலங்கியே பயந்து நின்றனரே.

3. ஒருவன் ஓடி மரம் ஒன்றில் ஏற
மற்றோர் நேயன் திகைத்துமே நின்றான்.
மரத்தில் ஏற வழி தெரியாது
தரைதனில் பிணம்போல் படுத்திருந்தான்.

4. கரடி வந்தவன் அருகினில் சென்று
முகர்ந்து பார்த்து பிணமெனக் கண்டு
திரும்பி தன்வழியே போய்விட்ட உடனே
நேயன் திடமுடன் எழுந்து நின்றானே.

5. மரத்திலிருந்த நேயனிறங்கி
கரடி சொல்லிய செய்தியைக் கேட்க
ஒருபொழுதும் ஆபத்தில் உதவா
நண்பரை நம்பலாகா தென உரைக்க.

6. கரடி கூறிய புத்தியைக் கேட்டு
நேயன் வெட்கி தன்வழி சென்றான்.
ஒருபொழுதும் நாம் அந்த மறவா
மனதில் வைத்து அன்புடன் வாழ்வோம்.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.